# நம்பாடுவான் கதை
# கைசிகப் பண்ணின் கதாநாயகன்



உருக்கிடும் இசை பொருந்திடச் செயும் உத்தமர்க்கருள் செய்தவன்
நெருக்கிடும் துயர் நொறுங்கிடும்படி நெறிகொடுத்திடும் நாயகன்
திருக்குறுங்குடி பெரியநம்பியின் திருவடிதனை வேண்டினேன்
கருக்கொளும் இசை உருக்கொளும்படி கவியளித்தருள் செய்கவே!

அன்றொருநாள் ஏனமென அவத ரித்த
அரியருகில் பூமிதேவி நெருங்கி வந்தாள்
தன்னுடைய நாயகன்பால் கனிவு கொஞ்ச
"சந்தேகம் ஒன்றுண்டு தெளிவு செய்க!"
என்றுரைக்க , "என்னவென" அரியும் கேட்டான்
இவ்வுலகில் எதுசிறந்த பக்தி மார்க்கம்
என்றெனக்கு விளக்கிடவே வேண்டும் " என்றாள்
இனியவனும் அன்போடு பதிசொல் கின்றான்



'கானத்தால் எவனென்னைத் தோத்த ரித்தே
களிப்படையச் செய்வானோ,
அவனுக்கேநான்
ஞானத்தால் அடைவதினும் சிறந்த முக்தி
நல்கிடுவேன் ' என்றுரைத்தான் வராஹ
மூர்த்தி.
வானத்தில், இல்லையெனில் ,மண்ணில் அந்த
வகைசிறந்த பக்தனுண்டோ?" என்று
தேவி
கானத்தைப் பழிக்கின்ற குரலில் கேட்கக்
கனிவோடு பரந்தாமன் பதில் சொல்கின்றான்.

வேறு



திருக்குறுங் குடியெனும் திவ்வியச் க்ஷேத்திரம்
தென்பார தத்தில் உண்டு
தருக்கமும் வேதமும் சான்றநல் வேதியர்
சந்ததம் போற்றி செய்ய
பெரியதோர் நம்பியாய் அங்குள கோயிலில்
பீடுடன் ஆளும் தேவை
உருக்கமாய்ப் பாடல்கள் பாடிநம் பாடுவான்
உணர்வுடன் போற்றி செய்தான்.



திருக்குலம் என்னுமோர் குலத்தினைச் சேர்ந்தவன்,
சிந்தையில் உயர்குணத்தான்
நெருக்கமாய் இறைஉரு உள்வந்து காணவே
நேர்ந்ததோர் தடையினாலே
பொருத்தமாய் எதுவரை போய்நிற்க ஒண்ணுமோ
போயங்கு நின்றுகொண்டு
திருத்தமாய் கைசிகப் பண்ணிலே உருக்கமாய்ச்
சேவித்துப் பாடிவந்தான்

அவனது வரலாறு யானுரைத்தேன் அதை
அருமறை முனிவர் கேட்டார்
உவகையாய் அவர்களும் பராசர பட்டருக்கு
உரைத்திட அவர் விரித்தார்
அவரெழுத் தோலையை உன்னிடம் தருகிறேன்
அதைப் படித்தறிக என்றே
நவமணி முத்துதிர் பூமிமா தாவிடம்
நகைபுரிந்து அரிகொடுத்தார்

கருத்தெலாம் இறையடி ஒன்றிநம் பாடுவான்
கைசிகப் பண்ணிசைத்துத்
திருத்தொண்டு புரிந்தனர் திருக்குறுங் குடிநம்பி
சேவையில் மகிழ்ந்திருந்தார்
திருநாளாம் கைசிக ஏகா தசிநாளில்
தேனார்ந்த கானம் கேட்க
திருமாலும் எதிர்பார்த்துக் காத்திருந் தாரெனின்
சேவையை என்ன சொல்ல?

இடைவிடா திப்படி நடைபெற்ற சேவைக்கோர்
இடையூறு தான்வந்தது
திடமுடன் கார்த்திகை ஏகாதசித் திருநாள்
சேவையும் செய்வதற்கு
நடந்தங்கு வரும்போது பிரம்ம ராஜஸ் ஒன்று
நம்பாடு வான்வழியில்
தடைபோட்டுக் கெக்கலித் தாடியே “நல்லதோர்
சாப்பாடு நீ!”என்றது.



பயனற்ற உடம்புக்கும் பசிதீர்த்து வைக்கின்ற
பயன்வந்த தெனமகிழ்ந்தே
“உயர்வான மாலுக்கே ஒருகானம் நான் பாடி
உம்மிடம் நான்வருகிறேன்
தயவாக அனுமதி தரவேண்டும் என்றதன்
தாள்பணின் தேயுரைத்தார்
‘இயலாது, நான் உன்னை இப்பொழுதே தின்பேன்’
என்றது பிரம்மராக்ஷஸ்



“சொன்னசொல் தவறிடேன், தவறிடின் பிறன் மனைச்
    சுகம்கொளும் பேர்கள் செல்லும்
துன்னரும் நரகுக்கு ஏகுவேனாகுக
    தொழத்தகும் குருபத்தினி
தன்னையே விரும்பிடும் சழக்கனும் உறுகின்ற
    தாழ்நர கெனைச் சேருக!
உன்னதப் பணிசெய்து மீள்வதற் கனுமதி
    உதவுக” எனப்பணிந்தார்



“முடியாது, முடியாது நீ சொன்ன நரகங்கள்
    முழுவதும் கொடியதில்லை
தடைநீக்க முடியாது, தாளாத பசியிலே
    தவிக்கிறேன் வருக “ என்றே
கொடியவன் கடுமையாய்க் கூறிட அடியவர்
    கொஞ்சமும் தளர்வுறாமல்
அடுத்தடுத் தேபல சத்தியம் செய்தனர்
    அவற்றையும் ஏற்கவில்லை

“அரிகேட்கப் பாடியே ஐயநான் மீளுவேன்
    அதுசெய்யவில்லை யென்றால்
திருமாலை நினையாமல் வேறுபல தெய்வங்கள்
    சேவிக்கக் கிட்டுகின்ற

பெரிதான நரகுக்குப் போகுவேன் ஆகுக
பேச்சினி மாறமாட்டேன்
ஒருவேளை பாடிட உத்தர விடும்' என
உத்தமர் தான்வேண்டினார்.



"என்னநீ சொல்லினும் அனுமதி தரமாட்டேன்
இப்போழுதே பிடித்துத்
தின்னுவேன் வாவென்று பிரம்மராக்ஷஸ் சொல்லிச்
சீறியே வரும்போதிலே
'இன்னபிற தெய்வங்கள் மாலுக்குச் சமமென
எண்ணியே தொழுவோர் பெறும்
பன்னரும் நித்யசம் சாரியாம் பரிபவம்
பாலிக்கட் டும் சத்தியம்"

என்றவர் சொன்ன சொல்பிரம்மராக்ஷஸ் ஏற்றே
இதனினும் கொடிதொன்றிலை
உன்னைநான் நம்பியே உத்தர வளிக்கிறேன்
உன்பணி முடித்துவா நீ"
என்றது, நம்பாடு வான்சென்றே நம்பிமுன்
இனிதாகப் பாட்டிசைத்தார்
தன்பணி முடிந்ததும் பிரம்ம ராக்ஷஸனிடம்
தான்சேர வழிநடந்தார்

கொடியவன் இராக்ஷசன் தன்னையும் வீழ்த்திடக்
குறுங்குடி நம்பியின் பால்
அடியவர் வேண்டினால் அரியவன் மறுப்பனோ?
அன்பரோ வேண்டவில்லை .
கொடுத்ததோர் வாக்கினைக் காத்திடுவேன் எனும்
குறிப்புடன் நடந்துசென்றார்
நெடியமால் முதியவர் வேடத்தில் அவர்வழி

நீள மறித்துநின்றார்.



“நீசெலும் வழியிலே பிரம்மா ராஜஸ் உண்டு
நேர்வழி போகவேண்டாம்
நான்சொலும் இப்பாதை போய்விடு நினக்கது
நல்லது” என் றேயுரைத்தார்
“நான்சொன்ன சத்தியம் மாறிடேன் என்றைக்கும்
நாராயணன் அடிமைநான்
வான்செல நாள்வந்து சேர்ந்திடின் நல்லதே
வருகிறேன்” என்றேகினார்

வேகமாய்க் கொடும்ப்ரம்ம ரரக்ஷசன் இடம்சென்று
“மீண்டனன் தின்க” என்றார்
“ஏகமாய் நீ பாடிச் சேர்த்த புன்ணியமெலாம்
ஈந்திடில் உனைவிடுகிறேன்
‘ஆகட்டும்’ என்றொரு வார்த்தைநீ சொல்”லென்றே
அப்பூதம் தானுரைக்க,
‘சாகநான் அஞ்சிடேன் சாப்பிட வா’வென்றே
சாற்றினார் நம்பாடுவான்.

“”சொன்னசொல் மாறாத தூயனே, தின்பதாய்ச்
சொன்னதை நான்விடுக்கிறேன்
இன்றுநீ பண்பாடிப் பெற்றதோர் புண்ணியம்
எனக்குநீ தருக போதும்
என்றனிவ் வேண்டுகோள் மறுக்காதே” எனவந்த
இராக்ஷஸன் தானுரைக்க,
“என்னநீ சொல்லினும் இம்மியும் தருகிலேன்
என்றனர்நம் பாடுவான்.



அன்பனே முந்தைய ஜன்மத்தில் நானுமோர்
அந்தணன், சோம சன்மா
முன்பொரு வேள்வியில் மந்திரம் சொல்கையில்
முறிவொன்று ஏற்பட்டதால்
இன்றிந்த வடிவிலே இருக்கிறேன் இன்றுனக்கு
எய்திய புண்ணியத்தில்
அன்புடன் கால்பாகம் அளித்திடு வாய்' என
அடிபணிந்தே வேண்டினான்.



"இன்றையப் புண்ணியம் கால்பாகம் உனக்குநான்
ஈந்தனன், ஏற்க" என்றார்.
முன்னுள்ள வடிவத்தை அந்தணன் பெற்றனன்
முறிந்தது கொடிய சாபம்
தன்சொல்லைக் காத்திட்ட அடியவர் முன்னாலே
சார்ந்தனர் நெடிய திருமால்
"என்னரும் பக்தனே, நம்பாடுவான் இனி
என்னிடம் வருக" என்றார்.



பக்தியில் சிறந்ததோர் பக்திநம் பாடுவான்
பக்தியே ஐயமில்லை
முக்தியை தருகென வேண்டவும் இல்லைபகை
முறிக்கவும் வேண்டவில்லை
தக்கநல் இசைபாடும் சக்தியைத் தந்தவன்
தான்கேட்க அவர்பாடினார்
இக்கதை கேட்டவர் சொன்னவர் யாவரும்
இனிதாக வாழ்க, வாழ்க!

நல்லதோர் பக்திநெறி காட்டிய வரலாற்றை
நாடக மாக்கியிங்கே
தொல்பெரும் நாள்களாய்த் தொடர்ந்திங்கு நடத்தியே
தொண்டுகள் பலர்செய்துள்ளார்
வல்லமைக் கலைஞர்கள் பலரையும் இயக்கியே
வழங்கிடும் அனிதா ரத்னம்
பல்வகை யிலும் இதை ஊக்கிடும் டி வி எஸ்
பல்லாண்டு வாழ்க வாழ்க!

இலந்தை சு இராமசாமி
28-11-2009
திருக்குறுங்குடி அழகிய நம்பி கோவிலில் 28-11-2009 இரவு
பத்துமணிக்கு அரங்கேறியது

